செ.வெ.எண்.23 நாள்.09.11.2017.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை பெல் மைதானத்தில் நடைபெறவுள்ள பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா அரங்கம் அமைக்கும் பணிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலட்சுமி அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.

--------

திருநெல்வேலி, பாளையங்கோட்டை பெல் மைதானத்தில் நடைபெறவுள்ள பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா அரங்கம் அமைக்கும் பணிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலட்சுமி அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (09.11.2017) நேரில் சென்று பார்வையிட்டனர்

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவிற்கு மேடை அமைக்கும் பணிகள், பயனாளிகளை அமர வைக்க ஒதுக்கப்பட்டுள்ள இடம், பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம், மேடைக்கு வரும் பயனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம், முக்கிய பிரமுகர்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் அரங்கு அமைக்கும் அனைத்துப் பகுதிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலட்சுமி அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து, பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு புகைப்படக் கண்காட்சி வைக்கப்படும் இடம், அரசுத் துறை அரங்குகள் அமைக்கப்படும் இடம் உள்ளிட்ட பகுதிகளையும் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலட்சுமி அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டனர். மேலும், நுழைவு வாயிலின் முகப்பு பகுதியில் குற்றாலம் அருவியின் தோற்றத்தைப் போல அமைக்கப்படும் நுழைவுவாயில் பகுதி பணியினையும், விழாவிற்கு வரும் பல்வேறு வாகனங்களை நிறுத்துவதற்கு செய்துள்ள ஏற்பாடுகள் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண்சக்திகுமார்,இ.கா.ப., அவர்கள், மாநகர காவல் துணை ஆணையர் திரு.சுகுணா சிங், இ.கா.ப., ஆகியோர் அலுவலர்களுடன் ஆலோசித்தனர். பின்னர் பொதுப்பணித் துறை அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் அரங்கு அமைக்கும் பணிகளை சிறப்பாகவும், விரைவாகவும் முடிக்க வேண்டுமென உத்தரவிட்டனர்.

இந்நிகழ்ச்சியில், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.மனோகரன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், இணை இயக்குநர் (கள விளம்பரம்) திரு.சண்முகசுந்தரம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் திரு.நாராயணன் நாயர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சு.ஜெகவீரபாண்டியன், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, முக்கியபிரமுகர்கள் திரு.சுதா பரமசிவம், திரு.பரணி சங்கரலிங்கம், திரு.ஆவின் ரமேஷ், திரு.பள்ளிக்கோட்டை செல்லத்துரை, திரு.சுப்பையாபாண்டியன், திரு.கபரியேல் ராஜன், திரு.ஆறுமுகம், திரு.கே.ஜே.சி.ஜெரால்டு, திரு.வெங்கடேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி